பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 03 2024 **SUNDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

2. தமிழகத்தில் அரசியல் கட்சிகள் தங்களது தேர்தல் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளன.

3. வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி மாவட்ட தலைநகரங்களில் இன்று நடைபெற்றது.

4. வெங்காய ஏற்றுமதிக்கான தடை மறு உத்தரவு வரும் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி வெற்றிபெற 194 ரன் என்ற இலக்கினை ராஜஸ்தான் நிர்ணயித்துள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற உறுதிபாட்டுடன் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது.

100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்யும் வகையில் எந்தவொரு வாக்காளரும் தேர்தல் நடைமுறையிலிருந்து விடுபட்டுவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

85 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் 40 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளை வாக்களிக்க செய்யும் விதமாக அவர்களின் வீடுகளுக்கே சென்று வாக்குகளை பெறுவதற்கான நடைமுறைகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சக்கர நாற்காலிகளுடன், மாற்றுத்திறனாளிகளையும், வயது முதிர்ந்தோரையும் அழைத்துச்சென்று அவர்களது வாக்குகளை பெறுவதற்கான முயற்சிகளையும் வரும் மக்களவைத் தேர்தலில், தேர்தல் ஆணையம் செயல்படுத்த உள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில், **Saksham** என்ற கைபேசி செயலியையும் தேர்தல் ஆணையம் இன்று தொடங்கியுள்ளது.

வாக்குச்சாவடிகளில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கு அளிக்கப்படும் வசதிகள் குறித்த தகவல்களை இந்த செயலி மூலம் அறிந்துகொள்ளலாம்.

முதல் முறை வாக்காளர்களுக்கு உதவும் வகையில், தேவையான வசதிகளையும் வாக்குச்சாவடிகளில் அமைத்துத்தர தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, வாக்காளர்களுக்கு உதவி செய்வதற்கான மையங்கள், உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தருவதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் அவர்களுக்கான தனி வாக்குச்சாவடிகளையும் அமைத்து தருவதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

<<<<<<<>>>>>>

மத்திய அரசின் பத்தாண்டுகால சாதனைகளை முன்நிறுத்தி, மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரத்தை தாம் மேற்கொண்டு வருவதாக பிஜேபி-யின் மூத்த தலைவரும், மத்திய இணையமைச்சருமான திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அவினாசியில் இன்று தமது பிரச்சாரத்தை தொடங்கிய அவர், பிஜேபி-க்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருவதாக கூறினார்.

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளாக ஆட்சி செய்துவரும் திமுக மீது ஊழல் குற்றச்சாட்டுகளை அவர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளாக ஆட்சி செய்துவரும் திமுக, தனது தேர்தல் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாக அக்கட்சியின் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தேனி மக்களவைத் தொகுதியில் தமது கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் தங்களது கூட்டணி வெற்றிபெறும் என்று கூறினார்.

<<<<<<<>>>>>>

சேலத்தில் தமது கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மாநிலத்தில் ஆளும் திமுக அரசு தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

வெங்காயம் ஏற்றுமதிக்கான தடையை மறு உத்தரவு வரும் வரை நீட்டிப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

உள்நாட்டில் வெங்காயம் விலையை கட்டுப்படுத்தவும், போதிய அளவில் மக்களுக்கு கிடைக்கவும் வகை செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வர்த்தகத்துக்கான தலைமை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 31-ஆம் தேதிமுதல், வெங்காய ஏற்றுமதிக்கான தடை முடிவுக்கு வருவதையடுத்து, இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் வெங்காய விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதன் ஏற்றுமதிக்கான தடை உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு இன்று நடைபெற்றது.

இதனை பார்வையிட்ட மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான திரு ராதாகிருஷ்ணன் அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்யவும், மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதை வலியுறுத்தியும் விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் அவர் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்காக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் அனுப்பும் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு ஜானி டாம் வர்கிஸ், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று தொடங்கிவைத்தார்.

நாகை மாவட்டத்திற்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் யாருக்கு வாக்களித்தோம் என்பதை கண்டறிவதற்கான கருவிகளும் போதிய அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார் என்று எமது செய்தியாளர் திரு செல்வன் ஜெபராஜ் கூறுகிறார்.

<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நீலகிரி மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான தேர்தல் பணி பயிற்சி வகுப்புகளை மாவட்ட ஆட்சியர் திருமதி அருணா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

------------------

நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமா ஆய்வு மேற்கொண்டார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை அம்மாவட்ட தேர்தல் அலுவலர் திரு ஷ்ரவன் குமார் இன்று நேரில் பார்வையிட்டு தேர்தல் தொடர்பான அறிவுரைகளை வழங்கினார்.

---------------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர்களின் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அம்மாவட்ட தேர்தல் ஆலுவலர் திருமதி மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

-----------------------

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அய்யனார் கோவில் மலைவாழ் மக்கள் வாக்களிக்க ஏதுவாக, தேர்தல் ஆணையம் மூலம் அவர்களுக்கு வாகன வசதி செய்துதரப்படும் என்று அம்மாவட்ட ஆட்சியர் திரு ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

------------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேர்தல் அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி சரயூ தொடங்கிவைத்தார்.

---------------

குருத்தோலை ஞாயிறை ஒட்டி, நாகை வேளாங்கண்ணி மாதா, தஞ்சாவூர் பூண்டி மாதா, தருமபுரி தூய இருதய ஆண்டவர் உள்ளிட்ட கிறிஸ்தவ தேவாலயங்களில் குருத்தோலை பவனி இன்று நடைபெற்றது.

-------------

பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திரத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று நடைபெற்றது.

-----------

திருவாரூரில் கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சதர் ஜென்ம பூமி கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில், 194 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் லக்னோ அணி சற்றுமுன்வரை 9.3 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 68 ரன் எடுத்துள்ளது.

ஜெய்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 193 ரன் எடுத்தது.

அகமதாபாதில் நடைபெறும் மற்றொரு போட்டியில், குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது. இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

---------

**Beirut** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<END>>>>>>